**சுருக்கம்**

நிதி – மதுரை மாநகராட்சி – இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் – மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் 2006–2007 க்கான நிதியுதவி – மத்திய அரசின் முதல் தவணையாக ரூ.741.45 இலட்சங்கள் மற்றும் மாநில அரசின் முதல் தவணைப் பங்கான ரூ.296.58 இலட்சங்கள் – விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.150** **நாள்: 8.12.2006**

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.67, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை. நாள் 12.8.2006.
2. மத்திய அரசின் நிதி மற்றும் செலவினங்கள் துறை, திட்டம், நிதி–1 பிரிவின் கடிதம் எண்.F.NO.44(1)/PF-1/2006-62, நாள் 18.8.2006.
3. மத்திய அரசின் நிதி மற்றும் செலவினங்கள் துறை, திட்டம், நிதி–1 பிரிவின் கடிதம் எண்.F.NO.44(1)/PF-1/2006-90, நாள் 15.9.2006.
4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவன கடிதம் எண்.34/TUF/JUNNRM/AM(M)/Govt.Corr., நாள் 19.10.2006.

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மாநகராட்சி இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மத்திய அரசு ஜவஹர்லால் நேரு தேசிய புதுப்பித்தல் திட்டத்தின் (JnNURM) கீழ் நிதியுதவி பெறும் நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிருவாகத்தின் கீழ் மதுரை இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு முதல் தவணையாக ரூ.741.45 இலட்சங்கள் விடுவித்துள்ளது. மேலும் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் நிதியுதவி

பெறும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) திட்டத்தின் கீழ் குடிநீர்த்திட்ட மேம்பாட்டிற்கு ரூ.5455.53 இலட்சங்கள் விடுவித்துள்ளது என்றும், எனவே மாநில அரசின் பங்குத்தொகையான ரூ.296.58 இலட்சத்தினை விடுவிக்குமாறு மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு பங்குத் தொகை (50%) | மாநில அரசு பங்குத் தொகை (20%) | மத்திய அரசு பங்குத் தொகையின் முதல் தவணை | மாநில அரசு பங்குத் தொகையின் முதல் தவணை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| முதுரை மாநகராட்சி இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டு திட்டம் (பகுதி–1 மற்றும் II) | 5931.6 | 2965.8 | 1186.32 | 741.45 | 296.58 | 1038.03 |

**3.** ஜவஹர்லால் நேரு தேசிய புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று செயல்படும் நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிருவாகத்தின் கீழ் வரும் நிதிப்பகிர்வானது மத்திய அரசு 50% மாநில அரசு 20% மீதமுள்ள 30% உள்ளாட்சி அமைப்புகள் பங்காகும். இதன்படி மதுரை மாநகராட்சி இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டத்திற்கு மத்திய அரசின் 50% பங்குத் தொகையில் முதல் தவணையாக 25% அதாவது ரூ.741.45 இலட்சத்தினை விடுவித்துள்ளது. இதற்கு மாநில அரசின் பங்கு ரூ.296.58 இலட்சங்கள். மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் ஏற்கெனவே ரூ.291.69 கோடிகள் உள்ளது. எனவே மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் ஏற்கனவே ரூ.741.45 இலட்சங்கள் + மாநில அரசின் பங்குத்தொகை ரூ.296.58 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1038.03 இலட்சங்களை இத்திட்டத்தை செயல்படுத்த விடுவிக்குமாறு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**4.** மேலே பத்தி மூன்றில் காணும் தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்றுக்கொண்டு மதுரை மாநகராட்சி இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசின் பங்கான ரூ.1038.03 இலட்சத்தினை (ரூபாய் ஆயிரத்து முப்பத்தெட்டு இலட்சம்

மற்றும் மூவாயிரம் மட்டும்) (மத்திய அரசின் பங்கு ரூ.741.45 இலட்சங்கள் + மாநில அரசின் பங்கு ரூ.296.58 இலட்சங்கள்) விடுவித்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் விடுவிக்கப்ட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2217 – நகர்ப்பகுதி வளர்ச்சி – 05.ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சி திட்டங்கள் – 800. ஏனைய செலவு – பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II.மாநிலத் திட்டம் – JL – ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் – நகர்ப்புற அடிப்படை வசதி அளித்தல் – நிருவாகம் – 09. உதவி மானியங்கள் – 01 – நடப்புச் செலவுக்கான மானியங்கள் – (2217 – 05 – 800 – JL 0914)".

6. மேலே பத்தி 5–ல் விடுவிக்கப்பட்ட தொகையைப் பெற்று தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது,

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.75476/நிதி(ந.நி.(ம)குவ.)/2006, நாள் 6.12.2006–ன் ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை–35.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.

மாநில தலைமைக் கணக்கர், சென்னை–18.

மாநில தலைமைக் கணக்கர், சென்னை–35.

நகல்:

நிதித்துறை, சென்னை–9.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ/செ) துறை, சென்னை–9.

–/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/–

பிரிவு அலுவலர்